# தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016
# Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

➢ 01 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையை தெரிந்தெடுத்து, அதனை குறித்து நிற்கும் இலக்கத்தை தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (✕) இடுவதன் மூலம் காட்டுக.

01) தன்னகத் தொடர்பாடலுடன் பொருத்தமான அம்சம்
(1) வழிகாட்டல் (2) குறைகூறல்
(3) சுயபார்வை (4) ஆலோசனை வழங்குதல்
(5) எச்சரிக்கை விடுத்தல்

02) கூட்டுத் தொடர்பாடலில் தெரிவு செய்த குழு என்பது
(1) எழுமாற்றாக ஏற்படும் குழுவாகும்
(2) தம் மன எழுச்சியின்படி ஒன்று கூடும் குழு
(3) தீர்மானங்களை எடுக்க ஒன்று கூடுவது
(4) ஒன்றைச் செயற்படுத்துவதற்காக ஒன்று சேரும்
(5) முறை சாராததாக இருக்கும்

03) பொதுவாக வெகுசன ஊடகப் பாவனைக்கு அவசியமான காரணியாக அமைவது
(1) ஊடக கலாசாரம் (2) படைப்பாக்கம் (3) தொழில்நுட்ப அறிவு
(4) ஊடக அறிவு (5) நடிக்கும் ஆற்றல்

04) 1976 இல் கலி, மற்றும் லெதர்ஸ் கூறியதற்கேற்ப வாய்மொழியல்லாத தொடர்பாடல் பணிகள் அல்லாதது
(1) கருத்தை விளங்கிக் கொள்ள உதவும்
(2) நன்கு உணர்வுடன் வெளிப்படுத்தப்படும்
(3) வினைத்திறன் வாய்ந்தவை
(4) சமிக்ஞைகள், அடையாளங்கள் காரணமாக உயர் தொடர்பாடல் மட்டமொன்று ஏற்படும்
(5) மொழியை அறிந்திருத்தல் அவசியமானது

05) ஒரு மனிதன் சமூகமயமாக்கப்படத் தேவையான காரணிகளைக் கொண்ட தொகுதியாகக் கொள்ளக்கூடியது
(1) சுய எண்ணக்கரு, ஊடக அறிவு, அறிவுச் சமூகம்
(2) சுயபார்வை, போலச் செய்தல், பின்பற்றுதல்
(3) போலச் செய்தல், பின்பற்றுதல், வகிபாகமேற்றல்
(4) வெகுசன ஊடகம், சுய எண்ணக்கரு, ஊடக அறிவு
(5) ஊடக கலாசாரம், எழுத்தறிவு, ஊடக அறிவு

06) பின்வரும் கூற்றுக்களில் உலகமயமாதல் செயன்முறை பிரதிபலிக்காதது
(1) மேலைத்தேச பண்பாட்டின் பரவுகை
(2) முதலாளித்துவ பொருளாதாரத்திற்கு சார்பானது
(3) தேசியம் வலுப்பெற்று பூகோளம் நலிவடைதல்
(4) நவீனத்துவ அடையாளங்களுடன் நெருக்கமானது
(5) சுதேச பண்பாட்டிற்கு அச்சுறுத்தலானது

07) மன அமைதி ஏற்படும், கற்பனை ஆற்றல் அதிகரித்தல், நேரடி விளக்கத்தை ஒத்த அனுபவத்தை பெறுதல், தொழில்நுட்ப பயன்பாட்டுத்திறன் மேம்படல் ஆகிய செயன்முறைகள் தொடர்புபடும் வெகுசன ஊடகங்கள்

(1) நவீன ஊடகம், வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை
(2) பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி, நவீன ஊடகம்
(3) பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, நவீன ஊடகம்
(4) வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, நவீன ஊடகம்
(5) பத்திரிகை, வானொலி, நவீன ஊடகம், தொலைக்காட்சி

08) ஆரோக்கியமான குடும்பம் ஒன்றில் அவதானிக்கப்பட முடியாத இயல்பு

(1) நெகிழ்வுத் தன்மையற்ற போக்கு
(2) கருத்திற்கு மதிப்பளிக்கும் தன்மை
(3) நேர்மய துலங்கல்களை ஊக்கப்படுத்தும் தன்மை
(4) பொதுவான இலக்கு நோக்கில் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருத்தல்
(5) சமூக மாற்றங்களை உள்வாங்கக் கூடியவாறு கட்டமைக்கப்பட்டிருத்தல்

09) ஊடகங்களின் செயற்பாடுகளை விஞ்ஞான முறையூடாக ஆராய்கின்ற செயன்முறை ஊடக ஆய்வுக்குட்பட்டதாகும். பகுப்பாய்வின் ஊடாக இனங்காணப்பட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளை முன்வைத்தல் செயற்பாடு பின்வருமாறு அழைக்கப்படும்

(1) தகவல் சேகரித்தல் (2) தகவல் பகுப்பாய்வு
(3) மதிப்பீட்டுச் செயன்முறை (4) பிரச்சினை இனங்காணல்
(5) முன்மொழிவுகள்

10) அபிவிருத்தி தொடர்பியலுக்கான இருபடிமுறை கட்டமைப்பை முன்வைத்தவர்

(1) டேனியல் லேனர் (2) வில்பர் ஷராம்
(3) எவ்ரெட் எம். ரோஜஸ் (4) லஸார்பீல்ட்
(5) போல் பீ ஸ்டீவன்

11) "ஒவ்வொரு அம்சத்திற்குரிய பொருத்தமான தகவலை ஒன்றாக்குதல்" ஞாபகப்படுத்தல் செயன்முறையில் பின்வருமாறு அழைக்கப்படுகிறது

(1) எண்ணக்கருப்படவாக்கம்
(2) மீட்டல்
(3) தகவல்களைக் கோர்த்தல்
(4) தகவல்களை ஒழுங்கமைத்தல்
(5) சட்டகத்தினுள் உள்ளடக்குதல்

12) வெகுசன ஊடகங்களின் சமூகப் பொறுப்புணர்வுக் கோட்பாடு (Social Responsibility Theory)

A - ஊடகச் செயன்முறையில் அரசின் தலையீட்டை இழிவளவாக்குகிறது.
B - பல்வேறு பிரதிநிதித்துவங்களுக்கான வெளியை வழங்குகிறது.
C - தேவைப்படும் போது அரசின் விதிமுறைகளை எதிர்பார்க்கிறது.
D - இலாபம் ஈட்டும் குறிக்கோள் மற்றும் போட்டித் தன்மையை இழிவளவாக்குகிறது.

(1) A, B ஆகியன மாத்திரம் (2) A, C ஆகியன மாத்திரம்
(3) A, B, C ஆகியன மாத்திரம் (4) B, C, D ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D ஆகியன எல்லாம்

13) உறவுமுறையின் மீதாக உருவாக்கப்படும் பண்பாடு

(1) இனப் பண்பாடு (2) வெகுசனப் பண்பாடு
(3) கிராமியப் பண்பாடு (4) தேசியப் பண்பாடு
(5) நாட்டார் பண்பாடு

14) காகமும் வடையும் பற்றிய கதையை வகுப்பறையில் கற்பித்த ஆசிரியர், கதையில் உங்களை மிகவும் கவர்ந்த ஒரு சந்தர்ப்பத்தைச் சித்திரமாக வரையும் படி மாணவர்களுக்குக் கூறினார். மாணவர்களிடமிருந்து ஆசிரியர் எதிர்பார்க்கக்கூடியது

(1) ஓவியம் பற்றிய திறனை அளத்தல்
(2) படைப்புத் தொடர்பாடல் திறன்களை இனங்காணுதல்
(3) யாதாயினும் ஒன்றை நிச்சயமாக இனங்காணும் ஆற்றலை அறிந்து கொள்ளல்
(4) கலை தொடர்பாக உள்ள விளக்கத்தை அவதானித்தல்
(5) நாட்டார் கதை பற்றிய விளக்கத்தை இனங்காணல்

15) சமூக விஞ்ஞானத்துறையில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் சில பதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - நவீனமயப்படுத்தல்
B - கைத்தொழில்மயமாக்கல்
C - சமூகமாற்றம்
D - முன்னேற்றம்
E - வளர்ச்சி

இவற்றுள் அபிவிருத்தி என்னும் பதத்துடன் ஒத்த கருத்துள்ள பதமாக இருக்கக்கூடியவை

(1) A, B, C, D ஆகியன மாத்திரம்
(2) A, B, C, E ஆகியன மாத்திரம்
(3) B, C, D, E ஆகியன மாத்திரம்
(4) A, B, D, E ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D, E ஆகியன எல்லாம்

16) அபிவிருத்தித் திட்டங்களை தயார்ப்படுத்துவதில் கவனஞ் செலுத்தப்பட வேண்டிய ஐந்து குறிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

A - திட்டத்தின் கால அளவு
B - திட்டத்தின் மதிப்பீடு
C - திட்டப் பகுதியின் புவிசார் காரணிகள்
D - திட்டத்தின் இலக்கு வைக்கப்படும் சமூகம்
E - திட்டம் சம்பந்தமான விடயங்கள்

மேற்குறித்த குறிப்புகளின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடும் வரிசைக் கிரமமாக அமைவது

(1) A, B, C, D, E (2) A, D, C, E, B (3) B, A, C, E, D
(4) C, D, B, E, A (5) D, E, C, B, A

17) ஊடகப் பண்பாடு தொடர்பான சில காரணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

A - பெறுநர்களின் தேவைகள் பற்றி கவனம் செலுத்தப்படுகின்றது.
B - சமூகத் தொடர்பியக்கம் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
C - தொடர்பாடலின் அனைத்துக் காரணிகளும் உள்ளடக்கப்படுகின்றன.
D - மனிதப் பண்பாட்டின் ஒரு பகுதியாக அமைகிறது.

ஊடகப் பண்பாடு தொடர்பான உண்மையான விடயங்களாக அமைவன

(1) A, B ஆகியன மாத்திரம்
(2) A, B, C ஆகியன மாத்திரம்
(3) A, B, D ஆகியன மாத்திரம்
(4) B, C, D ஆகியன மாத்திரம்
(5) A, B, C, D ஆகியன எல்லாம்

18) மாற்று வெகுசன ஊடகங்கள் பற்றிய சில நண்பர்களுக்கிடையிலான கலந்துரையாடலில் நிலவிய கருத்துக்கள் கீழே தரப்படுகின்றன.

நிமல் - ஆதாயம் கிடைப்பதாக இருந்தாலும் இது பெரியதொரு இலக்கு அல்ல.

கமல் - ஆனால் அவை பிரதான வெகுசன ஊடகங்களுக்குச் சவாலாக விளங்குகின்றன.

அமல் - ஆனால் அவை சிறியளவிலான பெறுநர் குழுக்களையே இலக்கு வைக்கின்றன.

விமல் - எப்படியிருந்தாலும் அவை பக்கச்சார்பற்ற வெகுசன ஊடகப் பண்பாட்டைக் கொண்டுள்ளன.

மேற்குறிப்பிட்டவற்றுள் இலங்கையில் உள்ள மாற்று வெகுசன ஊடகங்கள் சம்பந்தமான கூற்றுக்களாக அமைவன.

(1) நிமலினதும் கமலினதும் மாத்திரம்
(2) நிமலினதும் அமலினதும் மாத்திரம்
(3) நிமல் அமல் மற்றும் கமலினதும் மாத்திரம்
(4) கமல் அமல் மற்றும் விமலினதும் மாத்திரம்
(5) நிமல், கமல், அமல், விமல் ஆகிய அனைவரினதும்

19) பிரசித்தமான கலாசாரம் (*Popular culture*) குறித்து மாணவர்களுக்கிடையேயான கருத்துப் பரிமாற்றத்தில் சில சிந்தனைகள் வெளிப்பட்டன.

A - வணிக ஆதாயங்களின் பால் கட்டமைக்கப்படுவது
B - சிறுவர், இளைஞர்களையும் கவர்ந்திழுப்பது
C - பயன்படுத்துவது இலகுவானது
D - முழுமையான கலைத்துவத் தன்மையைக் கொண்டது
E - வெகுசன ஊடகங்களுடன் நெருங்கிய உறவைப் பேணுவது

மேற்குறித்தவற்றில் பிரசித்தமானவைகள் குறித்து மிகப் பொருத்தமானது

(1) A, B, C, D (2) A, B, C, E (3) A, B, D, E
(4) B, C, D, E (5) A, B, C, D, E

20) செயற்றிட்டம் ஒன்றுக்கு தகவல் திரட்டும் வழிமுறையாக அமையாதது

(1) வினாக்கொத்து முறை (2) நேர்காணல் அல்லது செவ்வி முறை
(3) அவதானிப்பு முறை (4) பங்கேற்பு அவதான முறை
(5) பரிசோதனை முறை

21) வெகுசன ஊடகத் தகவலின் மிக முனைப்பான இயல்பாகக் காணப்படுவது

(1) தினசரியாக இருத்தல் (2) வரலாறாக இருப்பது
(3) சிக்கல் தன்மையுடன் இருப்பது (4) பொழுதுபோக்கு
(5) பல்வகைத் தன்மை

22) தவறான கூற்றைத் தெரிவு செய்க.

(1) இருபடிநிலை எண்ணக்கருவுடன் கருத்துருவாக்கத் தலைவர்களும் வழிநடப்போரும் சம்பந்தப்படுகின்றனர்.
(2) குழுத்தொடர்பாடல் பெறுநர்களின் எண்ணிக்கையால் மாத்திரம் தீர்மானிக்கப்படுகிறது.
(3) பெறுநர்களுக்கான செய்தியொன்றில் வழிச்செலுத்துகையானது வாயிற்காப்பாளனின் வகிபங்கில் தங்கியுள்ளது.
(4) நடிப்பு என்பது தனியாளை மையப்படுத்திய நிகழ்வாகக் கவனத்திற் கொள்ளப்படுகிறது.
(5) நவீன சமூகத் தேவைகள் ஊடகப் பண்பாட்டினால் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றன.

23) அச்சிடல் தொழினுட்பத்தின் தோற்றம் தொடர்பில் வரலாற்றில் ஆக முன்னையதும் மிகப் பின்னையதுமான தகவல்கள் கிடைக்கப் பெற்றது

(1) இங்கிலாந்திலும் ஜேர்மனியிலும் (2) கிரேக்கத்திலும், உரோமிலும்
(3) இந்தியாவிலும், அமெரிக்காவிலும் (4) சீனாவிலும் ஜேர்மனியிலும்
(5) எகிப்திலும் ஜேர்மனியிலும்

24) அபிவிருத்திச் செய்தியொன்றில் உள்ளடக்கப்படாத ஒரு விடயம்
(1) நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்திச் செய்தியொன்றை இணைத்துக் கொள்ளல்
(2) சமூக சந்தைபடுத்தல் செய்தியின் தன்மை
(3) ஒரு வணிக நோக்கம்
(4) தெரிவு செய்யப்பட்ட ஓர் இலக்கு
(5) நிச்சயிக்கப்பட்ட ஓர் இலக்குப் பெறுநர் குழு

25) ஒரு நிறுவனம் வெளியகப் பொதுசனத் தொடர்பை (*External Public Relutions*) வெற்றிகரமாகப் பேணுவதில் மிக முக்கிய காரணியாக இருப்பது
(1) அனுசரணைகள், இலவசமாக தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம், இணையத்தளம்
(2) வருடாந்தச் சுற்றுலா, நலன்புரி அமைப்புக்கள் அனுசரணைகள்
(3) அனுசரணைகள், இணையத்தளம், ஊழியர்களின் ஒன்றுகூடல்கள்
(4) இலவசமாகத் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம், வருடாந்தச் சுற்றுலா, செய்திமடல்
(5) செய்திமடல், ஊழியர்களின் ஒன்றுகூடல் அறிவித்தல் பலகை

26) "பின்வருவனவற்றில் வானொலி ஊடகத்திறன் அல்லாதது
(1) செவிமடுத்தல் திறன்
(2) உச்சரிப்புத் திறன்
(3) பிரதியாக்கத்திற்கான படைப்பாக்கத் திறன்
(4) காட்சியாக்கத் திறன்
(5) பலகுரல் வெளிப்பாட்டுத் திறன்

27) மொழியின் பயன்நிலைகளில் பிரதியாக்கமும் ஒன்றாகும். பின்வரும் கூற்றுக்களில் பிரதியாக்க செயற்பாட்டுடன் தொடர்புபட்டமையாதது
(1) பிரதியாக்கம் ஒன்றிற்கு குறித்த நோக்கம் உண்டு.
(2) மொழியின் இலக்கணம், குறியீடுகள், பிரதியாக்கத்திற்கு அடிப்படையானது.
(3) பிரதியாக்கம் பல வடிவங்களில் உள்ளன.
(4) பிரதியாக்க வடிவங்கள் நவீன ஊடக அறிமுகங்களினால் மாற்றமடைந்துள்ளன.
(5) பிரதியாக்கம் என்பது எழுத்துக்களைக் கோர்த்து எழுதுதல் ஆகும்.

28) கலா பத்திரிகை ஒன்றில் காணப்பட்ட கவிதை ஒன்றை வாசித்து ஒருவித உணர்வு நிலைக்கு தள்ளப்பட்டாள். நாளடைவில் புதிதாக கவிதை புனையும் செயற்பாட்டிற்குத் தூண்டப்பட்டாள். இந்நிலை தொடர்புபடும் ஊடக பிரதிநிதித்துவ எண்ணக்கரு
(1) கட்டுவாக்க எண்ணக்கரு
(2) சமூக படிம எண்ணக்கரு
(3) தனியாள் விம்ப உருவாக்க எண்ணக்கரு
(4) இரசனை உணர்வு எண்ணக்கரு
(5) பால் சமத்துவ எண்ணக்கரு

29) ✶ தேவையற்ற தகவல்கள் தரவுகள் அறிக்கையிடப்படுவதை தவிர்த்தல்
✶ எளிமையான மொழிப் பிரயோகம் பயன்படுத்தல்
✶ கேட்பவரின் அறிவு, அனுபவம் இரசனை ஆர்வத்திற்கு ஏற்ப புலக்காட்சி ஏற்படுத்தப்படல்
மேற்குறித்த கூற்றுக்களின் இயல்புகள் பொருத்தமானதாக அமைவது
(1) தொலைக்காட்சி ஊடகத்துடன்
(2) நவீன ஊடகத்துடன்
(3) அச்சு ஊடகத்துடன்
(4) சமூக ஊடகத்துடன்
(5) வானொலி ஊடகத்துடன்

30) ✶ குறித்த தகவல் தொடர்பிலான தூண்டலை மிகவும் கவர்ச்சியான உள்ளடக்கத் தன்மையில் உருவாக்கலாம்.

✶ பொதுமக்களுடன் மிக அண்மித்த தன்மையாக காணப்படும் புகைப்படக்கலை, எழுத்துக் கலை, படைப்பாக்கக்கலை, திட்டமிடல் கலை, வடிவமைப்புக்கலை ஒன்றிணைக்கப்பட்டு தயாரிக்கப்படுவது

இவ் இயல்புகளுடன் மிகவும் நெருக்கமாக அமைவது

(1) கையேடு (2) துண்டுப்பிரசுரம் (3) செய்தித்தாள்
(4) சுவரொட்டி (5) சஞ்சிகை

31) ஒன்றை மற்றொன்றுடன் சமப்படுத்தி தொடர்புபடுத்தல் ஊடாக தகவல்களை ஞாபகப்படுத்தல் முறை

(1) கற்பனை செய்தல்
(2) எண்ணக்கருப்படவாக்கம்
(3) உவமான உவமேயங்களைப் பயன்படுத்தல்
(4) கோவைப்படுத்தல்
(5) மீட்டல்

32) ஒருவரின் கேட்டற் தேர்ச்சியினை விருத்தி செய்துகொள்வதில் குறைந்த செல்வாக்கைச் செலுத்தும் காரணியாகக் கொள்ளத்தக்கது

(1) கேட்கும் விடயத்தில் ஒரு பற்றை ஏற்படுத்தல்
(2) மன எழுச்சி நிலைகளுக்கு உட்படல்
(3) கேட்டவற்றை மானசீகமாக விவரித்தல்
(4) கேட்க வேண்டும் என்பதை மனதில் உருவாக்குதல்.
(5) தனக்குக் கிடைத்த தகவலின் முக்கியத்துவத்தை உணர்தல்

33) மொழியின் பயன்பாட்டு வடிவங்களில் உரையும் ஒன்றாகும். உரைவடிவத்தின் பண்பாக அமைவது

(1) தனியாட்களுக்கிடையில் நல்லுறவைப் பேணல்
(2) தனிப்பட்ட நோக்கும் கருத்தும் வெளியிடப்படுதல்
(3) தருணத்திற்கேற்ற பேச்சுக் கோலம், ரிதம், வேகம், முன்வைப்பு போன்ற சிறப்பியல்பு உண்டு
(4) கருத்து நன்கு எறிவை செய்யப்படும்.
(5) சுயமாகவே காணப்படுகிறது.

34) ரெய்லர், லிண்டன், மலினோவுஸ்கி ஆகியோர் வரைவிலக்கணம் செய்தது

(1) ஊடக கலாசாரம் பற்றி (2) கலாசாரம் பற்றி
(3) அபிவிருத்தித் தொடர்பாடல் பற்றி (4) சமூகப் படிமம் பற்றி
(5) அபிவிருத்தி பற்றி

35) சமூக வானொலி ஒலிபரப்பில் பயன்படுத்தப்படுகின்ற மொழிப் பயன்பாட்டின் இயல்பு நிலையில் அவதானிக்கப்பட முடியாதது

(1) பிரதேச மொழியைப் பயன்படுத்தல்
(2) மக்களை கவர்வதை இலக்காகக் கொண்டு பயன்படுத்தல்
(3) பேச்சு மொழியைப் பயன்படுத்தல்
(4) நியம மொழியைப் பயன்படுத்துதல்
(5) கிளை மொழியைப் பயன்படுத்துதல்

36) அபிவிருத்தி தொடர்பாடல் பற்றிய நாயர் - வைட் ஆகியோரின் பரிவர்த்தனை மாதிரி அணுகு முறையின் உள்ளடக்கப்பட முடியாத எண்ணக்கரு

(1) மேல்மட்ட பங்கேற்பை உயர்த்துதல் (2) ஊடகங்களின் ஒருங்கிணைப்பு
(3) ஒன்றிணைந்து தீர்மானித்தல் (4) கீழ் இருந்து மேல்நோக்கி அபிவிருத்தி
(5) குழுக்களை உருவாக்குதல்

37) உயர்தர வர்க்க மக்களிடம் அல்லாத உழைக்கும் மற்றும் கீழ்த்தட்டு, நடுத்தட்டு, மக்களுடன் நெருக்கமான வகையில் உருவாக்கப்படும் கலாசாரம்
(1) புகழ் கலாசாரம்
(2) வெகுசன கலாசாரம்
(3) மாறும் கலாசாரம்
(4) மாறா கலாசாரம்
(5) மரபுசார் கலாசாரம்

38) கலாசார அம்சங்கள் காலமாற்றங்களுக்கு உடன்படாமல் ஒரே நிலையில் காணப்படுதல்
(1) கலாசார விரிவு
(2) கலாசார திணிப்பு
(3) கலாசார உறுதுணை
(4) கலாசார தேக்கம்
(5) கலாசார பரிமாற்றம்

39) ஒருவர் செவிமடுத்தல் தேர்ச்சியை விருத்தி செய்வதற்கான அவசியமற்ற கூற்றாக அமைவது
(1) பிழையின்மைக்காக
(2) நேர்த்தியான தன்மைக்காக
(3) மனவெழுச்சி நிலைகட்டு உட்படாமைக்காக
(4) ஞாபகப்படுத்தல் செயன்முறைக்காக
(5) இடையூறுகளை உயர்மட்டத்தில் பேணுவதற்காக

40) உளச்செயற்பாட்டின் கட்டமைப்பைத் தந்தவர்
(1) மாஸ்லோ
(2) சிக்மென் ப்ரெஸ்ட்
(3) ஜொறைன் கெல்
(4) எட்வேட் சபீர்
(5) பியாசே

41) பின்வருவனவற்றுள் உள்ளக பொதுசனத் தொடர்புக்கான வழிமுறைக்கு எடுத்துக் காட்டாக அமையாதது
(1) சுற்றுலா மேற்கொள்ளுதல்
(2) வெகுமதியளித்தல்
(3) போட்டிகள் நடாத்தி பரிசுகள் வழங்குதல்
(4) விருந்துபசாரம் வழங்குதல்
(5) துண்டுப்பிரசுரம் வழங்குதல்

42) வனொலி நேர்காணல் சந்தர்ப்பம் ஒன்றில் நேர்காண்பவர் கவனத்தில் கொள்ள வேண்டிய இயல்பாக அமைய முடியாதது
(1) நேர்காணல் மையப்பொருள்
(2) நேரமுகாமை பேணுதல்
(3) நேர்காணப்படுபவரின் அந்தரங்க விடயங்கள் மற்றும் தனிப்பட்ட விடயங்கள்
(4) வினாக்கள் தொடர்பான வரையறைகள்
(5) நேர்காணல் மேற்கொள்ளப்படவுள்ள இடஅமைவின் பொருத்தப்பாடு

43) மோசமான தொடர்பாடுபவரின் பண்பாகக் கொள்ள முடியாதது
(1) பெறுநருக்கு பயனற்ற செய்திகளை வழங்குதல்
(2) இருவழி தொடர்புக்கு வாய்ப்பு வழங்குதல்
(3) கேட்கப்படாத செய்திகளையும் தொடர்பாடுதல்
(4) நோக்கின்றிய தொடர்பை முன்னெடுப்பவர்
(5) தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்கு உட்பட்டு தொடர்பாடுதல்

44) பின்வரும் தொடர்பாடல் மாதிரிகளில் பரிமாற்ற மாதிரிக்கு எடுத்துக்காட்டாக அமைவது
(1) பர்லோ மாதிரி
(2) ஷெனோன் மற்றும் வீவர் மாதிரி
(3) லாஸ்வெல் மாதிரி
(4) வெசுட்லி மாதிரி
(5) ஒஸ்குட் மாதிரி

45) "செய்தியின் மூலத்தை சிலர் விளங்கிக் கொள்வர். சிலர் விளங்கிக் கொள்ள மாட்டார்கள். சிலர் நேரடியாகப் பெறமாட்டார்கள் செய்திகள் குறித்த இடத்தில் குறித்த கருவி வழியாகத்தான் பரப்பப்பட வேண்டும் என்ற கட்டாயத் தன்மை காணப்படாது"
மேற்படி இயல்புகளுடன் தொடர்புடைய மாதிரி
(1) பலபடி போக்கு மாதிரி
(2) இருபடி போக்கு மாதிரி
(3) ஒருபடி போக்கு மாதிரி
(4) மருத்துவ ஊசி மாதிரி
(5) அரிஸ்ரோட்டில் மாதிரி

46) பிரசித்தமான கலாசார (*Popular Culture*) பற்றிய பொருத்தமற்ற கூற்றாக அமைவது
(1) வணிக ஆதாயங்களின் பால் கட்டமைக்கப்படுவது
(2) சிறுவர்களையும் இளைஞர்களையும் கவர்ந்திழுப்பது
(3) நீண்டகாலத்துக்கு மாற்றங்களுக்கு உட்படாமல் நிலைத்திருப்பது
(4) வெகுசன ஊடகங்களுடன் நெருங்கிய உறவைப் பேணுவது
(5) சமூக நடத்தைகளின் பால் பாதிப்பை உருவாக்குவது

47) தொடர்பாடற் செயற்பாடுகளைக் கற்கும் போது அதன் பொருத்தமற்ற வெளிப்பாடொன்றைக் கொண்டிருக்கும் குழுவைப் பெயரிடுக.
(1) தகவல் அளித்தல், சமூகமயமாகுதல், பண்பாட்டு முன்நகர்வு (*Cultural / Promotion*)
(2) பொழுதுபோக்களித்தல், தன்வயப்படுத்துதல், விவாதமும் கலந்துரையாடலும்
(3) சமூகமயமாதல், தகவல் அளித்தல், ஊடகக் கல்வியறிவு (*Media Literacy*)
(4) சமூக ஒருங்கிணைவு, சமூகமயமாதல், தன்வயப்படுத்தல்
(5) பொழுதுபோக்களித்தல், சமூகமயமாதல், தன்வயப்படுத்தல்

48) சமூக வானொலி ஒலிபரப்பு ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு முக்கியமானது. தற்போது இலங்கையில் சமூக வானொலி ஒலிபரப்பு இடம்பெறும் இடம்
(1) ராஜரட்டை (2) யாழ்ப்பாணம் (3) வயம்ப
(4) ஊவா (5) மகாநுவர

49) "எனது திறமைகள் தொடர்பில் நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். இந்த நிகழ்வில் இலங்கை சார்பாகப் புதியதொரு சாதனையை என்னால் அடைய முடியுமென எனது நண்பர்கள் அடிக்கடி கூறியிருக்கின்றனர். அந்த கனவு உண்மையானதாக மாறிய நாளாக இன்றைய நாள் அமைந்தது" இவ்வாறு ரவி கொஞ்சம் பெருமையுடன் கூறினான். இக்கூற்று பெரும்பாலும் பிரதிபலிப்பது
(1) அவனது அனுபவக் களத்தின் பாற்பட்டது.
(2) ஒன்றுபடு முயற்சியின் பாற்பட்ட அவனது திறமை (*empathy*)
(3) அவனது சுய எண்ணக்கரு பற்றிய உணர்வு
(4) அவனது தனியாள் அல்லது அகமுகித் தொடர்பாடலின் சிறப்பு
(5) மரபார்ந்த தொடர்பாடலில் குறித்த அவனது உள்ளுணர்வு

50) உயிர்வாழும் மொழிகளில் பின்வரும் எந்த மொழிக்கூட்டங்கள் உள்ளடங்காது
(1) சிங்களம் - ஆங்கிலம் - சமஸ்கிருதம்
(2) இத்தாலியன் - ருஷியன் - தமிழ்
(3) பாளி - சமஸ்கிருதம் - இலத்தீன்
(4) பிரெஞ்சு - ஹிந்தி - ஸ்பானிஷ்
(5) தமிழ் - பாளி - இலத்தீன்

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre
## தவணைப் பரீட்சை, நவம்பர்- 2016
## Term Examination, November - 2016

| தரம் :- 13 (2017) | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

❖ ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்

01) ''சோடித் தொடர்பாடல் என்பது வாழ்க்கையில் பொதுவாக இடம்பெறும் ஒன்றாகும்''

*1)* சோடித் தொடர்பாடலின் இயல்புகள் நான்கினைக் குறிப்பிடுக.

*2)* கூட்டுத் தொடர்பாடலில் நான்கு இயல்புகளைப் பெயரிட்டு, அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக.

*3)* வெகுசன ஊடகங்களால் வழங்கப்பெறும் தகவல் எவ்வாறு பெறுநர்களை நோக்கிப் பரவுகை செய்யப்படுகிறது என்பதை இரண்டு படிநிலை மாதிரியைக் கொண்டு, வரிப்படமொன்றைப் பயன்படுத்தி விளக்குக.

*4)* இரண்டு படிநிலை மாதிரிக்கு எதிரான, பிரசைகள் இதழியலின் (Citizen Journalism) நான்கு முக்கிய இயல்புகளைத் தனித்தனியாக விவரிக்குக. *(20 புள்ளிகள்)*

02) ''மனிதன் வாழும் சூழலிற்கேற்ப ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைக் கோலங்களை கற்றுக் கொள்ளுதல் சமூக கலாசார பின்னணியூடாகவே இடம்பெறுகின்றது''

*1)* ''ரோன்சி மலினோவுஸ்கி'' கலாசாரம் தொடர்பாக முன்வைத்துள்ள வரைவிலக்கணத்தில் உள்ளடங்கியுள்ள நான்கு கூறுகளைப் பெயரிடுக.

*2)* ''ஊடக கலாசாரம்'' (Media Culture) எண்ணக்கருவை சுருக்கமாக அறிமுகம் செய்க.

*3)* ஊடக கலாசார செயன்முறையினால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக விளக்குக.

*4)* ''ஊடக கலாசாரமும் சந்தைக்கும் இடையே பிரிக்க முடியாத தொடர்பு நிலவுகின்றது'' ''ஊடக விளம்பரங்களும் சமூகத்தாக்கமும்'' எனும் தலைப்பில் நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு கட்டுரை வரைக.

*(20 புள்ளிகள்)*

03) ''கூட்டான வாழ்வியலுக்கு முரண்பாடின்மை அவசியமானது''

*1)* முரண்பாடு ஒன்றினை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு இரு தரப்பினரையும் திருப்திப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்ற முரண்பாட்டு முகாமைத்துவ மாதிரியைப் பெயரிடுக.

*2)* சமூக பல்வகைமையுள்ள நாடு ஒன்றில் அமைதி கெடுவதற்கு ஏதுவாக அமையக்கூடிய இரு காரணிகளைக் குறிப்பிடுக.

*3)* அச்சு ஊடகத்தில் வன்முறை வெளிப்படுத்தப்படும் நான்கு விதங்களைக் குறிப்பிட்டு, அவற்றில் இரு அம்சங்களை சுருக்கமாக விளக்குக.

*4)* உள அமைதியை நெறிப்படுத்துவதற்கு உள்ளகத் தொடர்பாடலை பயன்படுத்தும் வழிமுறைகளை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

*(20 புள்ளிகள்)*

04) *1)* அபிவிருத்தி தொடர்பாக பேராசிரியர் விமல் திசாநாயக்காவின் வரைவிலக்கணத்தைத் தெளிவுபடுத்துக.

*2)* "அபிவிருத்தித் தொடர்பாடலில் நவீன ஊடகங்களைப் பயன்படுத்துவதிலும் பார்க்க பாரம்பரிய ஊடகங்களைப் பயன்படுத்துவது சிறந்தது" இக்கூற்றினை ஏற்றுக் கொள்கிறீரா? காரணம் தருக.

*3)* நாயர் மற்றும் வைட்டின் அபிவிருத்தித் தொடர்பாடல் தொடர்பான பரிமாற்ற மாதிரியினைச் சுருக்கமாக விளக்குக.

*4)* நவீன அபிவிருத்தித் தொடர்பாடல் வடிவங்கள் பற்றி விளக்குக.

*(20 புள்ளிகள்)*

05) *1)* அபிவிருத்தி தொடர்பாடல் கருத்திட்டம் தயாரிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

*2)* கருத்திட்ட ஆலோசனைகள் தயாரிக்கப்படும்போது உள்ளடக்கப்பட வேண்டிய அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

*3)* அபிவிருத்தித் திட்டத்தில் சமூகப் பங்கேற்பு முக்கியமானதொரு அம்சமாகும். இவ்வாறான முயற்சியை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு உதவக்கூடிய மூன்று வழிமுறைகளைக் குறிப்பிடுக.

*4)* சமூக அபிவிருத்தியில் சமுர்த்தி அதிகார சபையின் பங்களிப்புப் பற்றி விளக்குக.

*(20 புள்ளிகள்)*

06) *1)* மக்கள் தொடர்புக்காகப் பயன்படுத்தக்கூடிய நவீன கருவிகள் நான்கினைக் குறிப்பிடுக.

*2)* பொதுசனத் தொடர்பு பற்றி பிரித்தானிய மக்கள் தொடர்பு நிறுவனத்தின் வரைவிலக்கணத்தினைச் சுருக்கமாக விளக்குக.

*3)* மக்கள் தொடர்புக்காகக் கண்காட்சிகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் பற்றி சுருக்கமாக விளக்குக.

*4)* பாடசாலையின் மதிப்பை உயர்த்துவதற்கு சுற்றாடல் கருவியைப் பயன்படுத்தும் வழிமுறைகளை நான்கு அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

*(20 புள்ளிகள்)*

07) *1)* கூட்டுத் தொடர்பாடல் தேர்ச்சிகள் நான்கினைத் தருக.

*2)* தகவல்களை ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு கையாளக்கூடிய நான்கு உத்திகளைக் குறிப்பிடுக.

*3)* பயனுள்ள பேச்சு ஒன்றில் நீர் அவதானிக்கக்கூடிய நான்கு இயல்புகளைச் சுருக்கமாக விபரிக்குக.

*4)* வெகுசன தொடர்பாடல் செயன்முறையில் வாயில் காப்புடன் தொடர்புறும் நான்கு நபர்களைப் பெயரிட்டு, குறித்த துறையில் அவர்களின் வகிபங்கை ஆராய்க.

*(20 புள்ளிகள்)*